# தாய்மொழியின் பண்புகள்

பொருளடக்கம்:

1. தாய்மொழி தோன்றியதன் காரணம்
2. தாய்மொழியினால் கிடைக்கப் பெற்ற சிறப்புகள்
3. அயல் மொழியை பின்பற்றுவதால் ஏற்படும் இழப்புகள்
4. நமது தாய்மொழியை பின்பற்ற வேண்டிய கடமை

## 1. தாய் மொழி தோன்றியதன் காரணம்:

பரந்த இவ்வுலகில் மனிதன் தோன்றிய பின், அவ்வழியே தொடர்ந்த மனித இனம் தனது உணவு தேவைக்காக பல்வேறு இடங்களுக்குச் சென்று வாழ்ந்ததன் காரணமாக அவர்களுடைய நடைமுறை, பழக்க வழக்கம் மற்றும் உரையாடலின் அடிப்படையில் பல்வேறு மொழிகள் தோன்றியுள்ளன.

அடிப்படையில் பிறப்பால் நாம் அனைவரும் ஒரு தாய், தந்தையர் வழி வந்த தொடர்ச்சியின் சகோதர, சகோதரிகளே என்றாலும், பரவி வாழ்ந்ததன் காரணமாக அவரவர்களுடைய பண்பாடு மற்றும் கலாச்சாரத்தின் அடிப்படையில் இன்று மொழி-யின் வாயிலாக பல இனங்களாக உள்ளோம்.

## 2. தாய்மொழியினால் கிடைக்கப்பெற்ற சிறப்புகளில் சில:

இயற்கையால் மண் வளமும், உயிரினங்களும், பரம்பொருளும் நிறைந்த நன்நிலம். அந்நிலத்தில் நமது தேசத்தினர் (சமூகத்தினர்) உயிரினங்களின் துணையோடு நன்கு அறிவாற்றலுடன் வேளாண்மை, நெசவு, மண்பாண்டங்கள் தயாரித்தல், மர வேலைச் செய்தல் என தனது தேவைக்கேற்ப பல்வேறு தொழில்கள் செய்து நல்வாழ்வு வாழ்ந்து வந்தனர்.

இங்கு தேசம் என்பதை தமிழ்நாடோ, திராவிடமோ அல்லது பாரதமோ எப்படி வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். இவ்வாறு நமது சமூகத்தினரால் கிடைக்கப் பெற்ற உணவு தானியங்களில் சில

| |
|---|
| நெல், கோதுமை, தானியங்கள், பருப்பு வகைகள், காய்கறிகள், கீரைகள், கிழங்குகள், பழங்கள், பால், முட்டை, இறைச்சி, மீன் போன்றவை. |

இதில் நமது வாழ்வாதாரத்திற்கு பயன்பட்ட மாடு, குதிரை, கழுதை, யானை, ஒட்டகம், கோழி, ஆடு, நாய், பூனை மற்றும் பறவைகள், பூச்சிகள், புழுக்கள் என பல உயிரினங்களின் பங்கீடு உள்ளது.

இதில் மாடு-வுடைய பங்கீடு மிகுந்து காணப்படுகிறது.

உழவுக்கு, எருவுக்கு, நீர் இறைப்பதற்கு, வண்டியின் மூலம் பயணிப்பதற்கு, பொருள்களை பிற இடங்களுக்கு எடுத்துச் செல்வதற்கு மற்றும் தோல் பொருள் தயாரிப்பு-கள் என பல வகைகளில் பயன்படுகிறது.

இதுபோல் மற்ற இயற்கை வளங்களும் நமக்கு பெரிதும் பயன்படுகிறது.

- சூரியன் உலகிற்கே வெளிச்சமாகவும், நேரம் காட்டியாகவும் (கடிகாரமாகவும்), உயிர்களுக்கு உரமாகவும் பயன்படுகிறது.
- இரவில் நிலவும், விண்மீன்களும் அலங்கார விளக்காக ஆர்ப்பரிக்கின்றன.
- கடலும், மலையும், வானமும் சேர்ந்து மழையின் மூலமாக மண்ணுக்கும், உயிர்களுக்கும் நல்ல நீர் வளத்தை கொடுக்கின்றன.
- வளம் மிக்க மண்ணோடு உயிரினங்களின் கழிவுகளும் சேர்ந்து உயிர்த்தெழும் பலவகையான தாவரங்களை கொண்டு உணரலாம் இயற்கையின் அறிவியலை.

இவ்வாறு இயற்கையின் படைப்பில் வேளாண்மையின் வளர்ச்சியில் இயற்கைக்கு நன்றி செலுத்தும் விதமாக சூரியன் பொங்கல், மாட்டுப் பொங்கல் என பொங்கல் வைத்து வணங்குகிறோம்.

இப்போது இந்த இயற்கை தந்த கொடையை நாம் அனுபவிக்கிறோமா?

இயற்கையான சூழலுடனும், தரமான உணவுடனும், உறுதியான உடல் உழைப்புடனும் மகிழ்வோடு மன நிறைவோடு நோயின்றி நூற்றுக்கும் மேற்பட்ட ஆண்டுகள் நலமாக வாழ்ந்தனர் நம் முன்னோர்கள்.

இயற்கை சார்ந்த நமது பாரம்பரிய தொழில்களில் சில:

- செங்கல், ஓடு, மண்பானை தயாரிப்புகள், கட்டுமான பணிகள் போன்ற மண்பாண்ட தொழில்கள்
- கூடை பின்னுதல், முறம், பாய் பின்னுதல், கயிறு திரித்தல், பைகள் தயாரிப்பு, கூரை வேய்தல், கட்டுமானத்திற்கு மரங்களை தயார்படுத்துதல், அலங்கார பொருட்கள் தயாரிப்பு, போன்ற மர வகை தொழில்கள்
- இடத்தின் தட்ப வெப்பம் மற்றும் சுற்றுச் சூழலுக்கு ஏற்ப கல், மண், மரங்களால் ஆன குடியிருப்பு கட்டுமானங்கள் அமைத்து வாழ்தல் மற்றும் பருத்தி, சணல், கம்பளி போன்றவைகளால் ஆடைகள் தயாரித்து உடுத்துதல், கால்நடை வளர்ப்பு என பல தொழில்கள் செய்து வாழ்ந்தனர்.

மேலும் பாரம்பரிய விளையாட்டுகள், கட்டடக் கலை, சிற்பக் கலை, ஓவியக் கலை, இசைக் கலை, நாட்டிய கலை, நாடகக் கலை என பல்வேறு கலைத் திறனோடு இறை நம்பிக்கையுடன் வாழ்ந்தவர்கள் நமது சமுகத்தினர்.

இவ்வாறாக "அன்பும் அறனும் அடிப்படையாகக் கொண்டு பொருளாதாரத்தில் சிறந்து விளங்கியது நமது தேசம்".

இவையெல்லாம் எங்கே போனது இன்று?

3. அயல் மொழியை (ஆங்கில மொழி) பின்பற்றுவதால் ஏற்படும் இழப்புகள்:

- வணிக நோக்கில் அதிக உற்பத்தி, வேகமான வளர்ச்சி, அதிகமான லாபம் கிடைக்க வேண்டும் என்ற காரணத்தினால் மரபணு மாற்றப் பட்ட விதைகள்.
- ரசாயன உரங்கள், களைக் கொல்லி, பூச்சிக் கொல்லி போன்ற மருந்துகளால் மண் வளமும், பொருளின் தரமும் கெடுதல்.
- மின்சாரம், எரிபொருள் போன்ற ஆற்றல் மூலம் இயக்கப் படுகின்ற அதிவேக இயந்திரங்கள் உற்பத்திக்கு பயன்படுத்துவதால், பொருள்கள் அதிகளவிலான வெப்பத்தினால் அழுத்தமடைந்து இயல்பு நிலையை இழந்து தரமற்று போகிறது.
- மேலும் எரிபொருளாலும், தொழிற்சாலை கழிவுகளாலும் காற்று, நீர், நிலம், உயிரினம் என அனைத்து இயற்கை வளங்களும் மாசடைகிறது.

இத்தனை உபாதைகளால் சீரழிக்கப்பட்டு கிடைக்கப் பொருள் எப்படி தரமானதாகும்? இதுவா பொருளாதாரம்?

இவ்வகையான பொருள்களை உண்ணுவதாலும், நவீன இயந்திரங்களின் வளர்ச்சியால் மனித உடல் உழைப்பு பற்று போவதாலும் மற்றும் நவீன மருந்துகளாலும் உடல் நலம் குன்றி இளம் வயதிலேயே பல நோய்களுக்கு உட்பட்டு மாரடைப்பு போன்ற காரணங்களால் உயிரிழக்கிறான். இயற்கை மாற்றமடைந்து வறட்சி ஏற்பட்டு மற்ற உயிர்கள் அழிவிற்கும் மனிதனே காரணமாகிறான்.

இந்தப் போக்கு மனிதனின் அறியாமையை காட்டுகிறது. இதனை விளங்க முடியாமல் வாழும் பலரால் குற்றங்கள் அதிகரிக்கிறது. இன்று எல்லா இடங்களிலும் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டு தற்காத்துக் கொள்ளும் அளவிற்கு இயல்பு வாழ்க்கை மாறியுள்ளது. இதே நிலை தொடர்ந்தால் மேலும் நமது நிலை?

எரிபொருள், மின்சாரத்தால் ஊர்தக் கூடிய இயந்திரங்களால் விபத்துகளும், உயிரிழப்புகளும் ஏராளம். ஆனால் அவ்விழப்புகளுக்கு பணமே இழப்பீடாக வழங்கப்படுகிறது. இது எவ்வகையில் உயிரின் மதிப்புக்கு ஏற்றதாகும். இவ்வாறான இழப்புகளை நாம் இப்போது பார்த்து பார்த்து பழகி போய் விட்டதால் இன்று உயிர் இழப்புகளை சாதாரணமாக கடந்து போகிறோம்.

மனித ஆற்றலால் பெறப்படும் பொருளின் தரத்தை நெசவு தொழிலை உதாரணமாக கொண்டு பார்க்கலாம்.

கைத்தறியில் பெறப்படுகின்ற தரம் விசைத்தறியில் இல்லையென்று.

இவ்வாறு "ஆங்கில வழி நிர்வாகத்தால் வணிக ரீதியாக ஏற்பட்டது நமது பொருளாதார இழப்புகள்".

4. நமது தாய்மொழியை பின்பற்ற வேண்டிய கடமை

தற்போது அரசின் வழிகாட்டுதலின்படி அயல் மொழியை பயிற்று மொழியாக கொண்டதே இன்றைய அனைத்து பிரச்சனைகளுக்கும் காரணமாகிறது.

இதனால் கிராமங்களில் வசிப்போருக்கு அயல் மொழியான பொதுமொழி வழியில் கல்வி பயில போதிய பயிற்சி பெற முடியாததால் பெரும்பாலானோர் நகரங்களில் குடியேறுகின்ற சூழல் உருவாயிற்று. மேலும் கிராம மக்களுக்கும் நகர மக்களுக்கும் இடையே மிகுந்த ஏற்றத்தாழ்வு ஏற்படுகிறது. அயல் மொழியை கற்பதற்கும் அதன்வழி கல்வி பயில்வதற்கும் நீண்ட காலம் செலவிடப்படுகிறது. இருப்பினும் சரியான புரிதல் இல்லாமல் நமது வளர்ச்சியில் பின்னடைவு ஏற்படுகிறது. நமக்கான பாடங்கள் இதில் குறைவாகவே காணப்படுகிறது. அயல் நாட்டின் வாழ்வு முறையை இங்கு கற்பிக்கப்படுவதால் நமதான கலாச்சாரம் மாற்றமடைகிறது. இதெல்லாம் சரியானதா என்று பார்த்தால்? இல்லவே இல்லை.

இன்றைய பொதுமொழியான ஆங்கிலம் பேசுவதற்கும், எழுதுவதற்கும் வேண்டுமானால் அருக்கமாகவும், நாகரீகமாகவும் இருக்கலாம்.

ஆனால் அவரவர்களுக்கும் அவரது தாய்மொழி போல் உணர்வாகவும், உயிராகவும், ஒழுக்கமாகவும், மகிழ்வாகவும், நன்மையாகவும், நிறைவாகவும் இருக்க முடியாது. எனவே இப்போது காண்கிற அனைத்து பிரச்சனைகளையும் தாய்மொழி என்ற ஒற்றை இலக்கால் தீர்வு காண முடியும்.

தாய்மொழியை பயிற்று மொழியாக கொண்டால் நமக்கான பாடங்கள் (நமது பண்டைய வரலாறு, வாழ்வு முறை) எல்லாம் நமது பாடப் புத்தகங்களில் இடம்பெறும். அதை நமது தாய்மொழியில் பயிலும் போது எளிதான புரிதலுடன் நல்ல சிந்தனையும் ஓங்கும். நமது வாழ்வு முறை இயற்கை வழிச் செல்லும். நமது பண்பட்ட கலாச்சாரமும், பாரம்பரியங்களும் திரும்பப் பெற்று வளர்ச்சியடையும்.

தாய்மொழியால் நமது பண்பாடு, நிலம், வளம், உயிரினம் போன்ற அனைத்தும் இயற்கையாக காக்கப் படும். நமது பொருளாதாரம் சிறந்து விளங்கும். மக்களிடையே உள்ள ஏற்றத் தாழ்வுகள் குறைந்து குற்றங்கள் நீங்கும். கிராமம் வளம்பெறும். எல்லோர் வாழ்விலும் மகிழ்ச்சி மலரும். தாய்மொழி என்ற ஒற்றை இலக்கால் இவை அனைத்தும் சாத்தியப்படும்.

எனவே அரசு இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு தற்சார்பு பொருளாதார நோக்கோடு மக்களுக்கு நல்வாழ்வு அளித்திட கலந்தாலோசித்து நமது தாய்மொழியை வழக்கிற்கு கொண்டு வந்து நடைமுறை படுத்துவதே அரசின் முதல் தலையாய கடமையாகும்.

மிதிவண்டி போன்ற மற்ற தேசத்தின் சிறந்த படைப்பு-களையும் போற்றலாம், பயன்படுத்தலாம்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

கற்ற அறிவை நல்வழியில் பயன்படுத்துவது சிறப்பு. நமது வாழ்வை 25 ஆண்டுகளுக்கு முன், 50 ஆண்டுகளுக்கு முன் என்று சற்று பின்நோக்கி பாருங்கள் வாழ்வின் மாற்றங்கள் புரியும்.

> அடக்கி ஆளுவது அரசின் கடமையல்ல
> நல்ல வழிகாட்டுதலே அரசின் கடமையாகும்

நமது பொருளாதாரத்தை காக்க மற்றும் அதன்வழி பயணிக்க நமது தாய்மொழியை பின்பற்றுவது நமது கடமை. இது அனைத்து மொழி சார்ந்த இனங்களுக்கும் பொருந்தும்.

சிந்திப்போம் செயல்படுவோம்
நல்லதை விதைப்போம் நல்லது நடக்கும்
தமிழே தமிழ் இனங்களுக்கான உயிர்!